# ஆபத்தான பணிகளில் பெண்கள் : கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கும் DASH நிறுவனத்தில் கண்ணிவெடி அகற்றும் பெண் தொழிலாளர்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூகவியல் ஆய்வு

**மலரினி, மு., பாஸ்கரன், நி**
சமூகவியல் துறை, யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்
malarinym@gmail.com

*ஆபத்தான பணிகளில் ஒன்றான கண்ணிவெடி அகற்றலானது பெண்களின் "தொழில்நிலைகளில்" ஒன்றாக காணப்படுகிறது. இவ்வாய்வானது, கண்ணிவெடி அகற்றல் பெண்களின் "தொழில்-நிலைகளுள்" ஒன்றாக இருப்பதற்கான காரணங்கள், அதில் பெண்களின் வகிபங்குகள் மற்றும் அதுசார்ந்து அவர்கள் எதிர்நோக்கும் சவால்களையும் இனங்காணுதலும் அவற்றிற்கான தீர்வுகளை முன்மொழிதலும் பிரதான நோக்கமாகக் கொண்டதாகும். இவ் ஆய்வானது, கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கும் DASH நிறுவனத்தில் கண்ணிவெடி அகற்றும் பெண்தொழிலாளர்களில் இருந்து நோக்கம் கருதிய மாதிரி அடிப்படையில் 50 மாதிரிகள் தெரிவு செய்யப்பட்டு, முதலாம்நிலை தரவு சேகரிப்புக் கருவிகளான வினாக்கொத்து, விடய ஆய்வு, பிரதான தகவல் தருனருடனான நேர்காணல், குவிமையக் குழுக்கலந்துரையாடல் மூலம் ஆய்வுக்கான தரவுகள் சேகரிக்கப்பட்டன. பெறப்பட்ட தரவுகள் கணியம்சார் மற்றும் பண்புசார் ஆய்வு வடிவங்கள் இணைந்த கலப்பு முறையில் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக கணியம்சார் தரவுகள் சமூக விஞ்ஞானங்களுக்கான புள்ளிவிபரவியல் மென்பொதியை பயன்படுத்தி (SPSS) விபரணப்புள்ளிப் பகுப்பாய்வுக்கும் உட்பட்டு அட்டவணை, வரைபுகள், மூலம் அறிக்கை செய்யப்பட்டுள்ளன. ஆய்வின் முடிவுகளின் படி, ஆபத்தான பணியாகக் காணப்படும் கண்ணிவெடி அகற்றலில் பெண்களின் பால்நிலைசார் வகிபங்கில் மாற்றத்தை ஏற்படுத்தி யுள்ளதுடன், குடும்ப வறுமை, பெண்தலைமைத்துவம் மற்றும் குடும்ப அங்கத்தவர்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் நோக்கில் பெண்கள் இப்பணியில் ஈடுபட்டு வருவதால், அவர்களின் தொழில்நிலைகளில் ஒன்றாகக் காணப்படுகிறது. கண்ணிவெடி அகற்றல் தொழிலில் ஈடுபடும் பெண்களில் 48% வீதமானவர்கள் தங்கள் பிள்ளைகளுடன் குறைவான நேரத்தைச் செலவிடுவதாகவும், 36% வீதமானவர்கள் குடும்பத்தில் இரட்டைச் சுமையை கொண்டவர்களாகவும், 12% வீதமான பெண்கள், தமது குடும்ப அங்கத்தவர்களை பிரிந்து இருப்பதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. 62% வீதமான பெண்கள் ஆபத்தான இப்பணியில் ஈடுபடுவதால் சமூகப்பிரச்சினையை எதிர்கொள்பவர்களாகவும், 60% வீதமான பெண்கள் நிறுவனம்சார் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். அத்துடன் இவர்களில் உணவுப்பழக்கவழங்கங்கள், ஆடை மற்றும் பாதுகாப்பு, உடல் ஆரோக்கியம் குறித்த பிரச் சினைகள் மற்றும் தூக்கமின்மை, இடைவேளை குறைவான நிலையில் ஓய்வற்றநிலையில் இத்தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில், ஆபத்தான பணிகளுள் ஒன்றான கண்ணிவெடி அகற்றலில் ஈடுபடும் பெண்கள் எதிர்கொள்கின்ற சவால்களை வெற்றி கொள்வதற்கான தனியாள், குடும்ப, சமுதாய மற்றும் நிறுவன மட்டத்திலான பரிந்துரை களும் முன்வைக்கப்பட்டுள்ளன. அதாவது தனிநபருக்கான பரிந்துரையாக தனியாள் நடத்தை மற்றும் உளப்பாங்கில் மாற்றத்தை ஏற்படுத்தல், தொழிலில் ஏற்படும்*